


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மின்சாரம் தாக்கி, விபத்து மற்றும் கடலில் காணாமல் போன ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து காசோலைகளை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (06.08.2016) வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு தலைவர் திரு. சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 500/2016 நாள்: 06.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 10 மீனவர் குடும்பத்தினருக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 6 குடும்பத்தினருக்கும் என மொத்தம் 16 குடும்பத்தினருக்கு நிவாரணத்தொகைக்கான காசோலைகளை இன்று (06.08.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் நலன் கருதி, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். மேலும் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடும்போது கடலில் காணாமல் போனாலோ, விபத்தில் மரணம் அடைந்தாலோ, அவர்களது குடும்பம் வறுமையிலிருந்து மீள்வதற்காக, மீனவர்குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், காப்புறுதி நிவாரண தொகை வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டமானது, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு இணைந்து, தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனம், புதுடெல்லி (FISHCOPFED, New Delhi) வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மீனவ கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு மீனவருக்கு தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு இணைந்து ரூ.20.27 சந்தா தொகையாக (Premium) செலுத்தப்படுகிறது. குறிப்பாக மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டத்தின்கீழ், விபத்தில் மரணமடைந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 10 மீனவர் குடும்பத்தினருக்கு ரூ. 18 இலட்சத்திற்கான காசோலைகளையும், விளவங்கோடு வட்டம், வள்ளவிளை, ஏழுதேசம் "சி" கிராமத்தை சார்ந்த திரு. வினு 01.08.2015 அன்றும், திரு. சிலுவையன் 02.09.2015 அன்றும், மணக்குடி கிராமத்தை சார்ந்த திரு. ஜான் கென்னடி மற்றும் பொழிக்கரை கிராமத்தை சார்ந்த திரு. தஸ்னேவிஸ் ஆகியோர் 30.10.2015 அன்று, கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும்போது இயற்கை இடர்பாடு காரணமாக மரணடைந்தார்கள். அன்னாரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலைகளையும், சாலை விபத்தில் 30.10.2015 அன்று மரணமடைந்த அகஸ்தீஸ்வரம் வட்டம், மருங்கூர் கிராமத்தை சார்ந்த திரு. மகேஷ் என்பவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. ஒரு இலட்சத்திற்கான

காசோலையினையும், 03.07.2013 அன்று மின்சாரம் தாக்கி மரணமடைந்த, விளவங்கோடு வட்டம், கீழ்குளம் கிராமத்தை சார்ந்த திருமதி. ராதா என்பவரின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 15 ஆயிரத்திற்கான காசோலையினை என மொத்தம் 16 குடும்பத்தினருக்கு ரூ.23 இலட்சத்து 15 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று (06.08.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு தலைவர் திரு. எம்.சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லேமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. ரூபர்ட் ஜோதி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சித்தலைவர் திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. கனகராஜ், திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. வேல்முருகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.